பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 1 (17—11—71) புதன் வெளியூர்: கார்த்திகை 2 (18—11—71) வியாழன் [இதழ்: 129

தற்கொலை முயற்சி

குற்றமாகக் கருதும் விதியை நீக்கிவிட வேண்டுமாம்

★

புதுடில்லி, நவ. 17—

"தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பதைக் குற்றமாகக் கருதும் சட்ட விதியை நீக்கிவிட வேண்டும்!!"

என்று சட்டக் கமிஷன், மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது.

கலைஞர் உடல்நிலை— மருத்துவர்கள் பரிசோதனை

★

சுற்றுப்பயணம் தொடங்கியதும் கென்னடி முனைக்குச் செல்லக்கூடும்

மாபெரும் ராக்கெட் தளத்தைப் பார்வையிடுவார்

வாஷிங்டன், நவ. 17—

அமெரிக்காவில் கண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் விரைவாகக் குணமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அவரைக் கவனித்துவரும் டாக்டர்கள் இன்று பரிசோதனை செய்து, அவர் எப்போது மருத்துவமனையைவிட்டு வெளியேறலாம் என்பதை முடிவு செய்வர்; அதன் பிறகு கலைஞர், தமது சுற்றுப்பயணத்தைத் தொடங்கவிருக்கிறார்.

வியாழக்கிழமையன்று தமது சுற்றுப்பயணத்தைத் தொடரக்கூடும் என்ற நிலையில் கலைஞர் அவர்கள், பால்டிமோர் நகரிலிருந்து கென்னடி முனைக்குச் செல்கிறார்; அங்குள்ள மாபெரும் ராக்கெட் தளத்தைப் பார்வையிடுவார்.

பிறகு நியூயார்க்—சிகாகோ—லாஸ் ஏஞ்சல்ஸ்—சான்பிரான்சிஸ்கோ ஆகிய நகரங்களுக்குச் சென்று அங்குள்ள முக்கிய இடங்களைப் பார்வையிடுவார்.

கலைஞருடன் க. அன்பழகன்— என். வி. நடராசன் தொலைபேசித் தொடர்பு

சிம்சன் தொழிலாளர்கள்— மின் துறை ஊழியர்கள் பிரச்னை பற்றிக் கேட்டறிந்தார்

சென்னை, நவ. 17—

நலத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்களும் நேற்று மாலை 5-மணியளவில் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு கலைஞரின் உடல் நலம் பற்றி விசாரித்தறிந்தனர்.

முரசொலி மாறன் அவர்கள், கலைஞரின் உடல் நலம் நன்கு தேறிவருகிறது என்றும், விரைவில் மருத்துவமனையிலிருந்து திரும்பிவிடுவார் என்றும் தெரிவித்தார்.

சிம்சன் தொழிலாளர் பிரச்சினை — மின் துறை தொழிலாளர் பிரச்சினை மற்றிய விவரங்களை முதலமைச்சர் கேட்டதாக முரசொலி மாறன் தெரிவித்தார்.

வெற்றிவீரருக்குக் கலைஞர் வாழ்த்து

சென்னை, நவ. 17—

பொள்ளாச்சித் தொகுதி மக்களவை இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற திரு. மோகன்ராஜ அவர்களுக்கு அமெரிக்காவிலுள்ள பால்டிமோர் மருத்துவமனையிலிருந்து வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

தற்போது இல்லையாம்

புதுடில்லி, நவ. 17—

"இந்தியாவிலுள்ள வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களை உடனடியாக நாட்டுடைமையாக்கும் திட்டம் தற்போது இல்லை"

என்று நாடாளுமன்ற மேலவையில், பெட்ரோல்—இரசாயனத் துறை அமைச்சர் பி. சி. சேத்தி தெரிவித்தார்.

காயிதே மில்லத் உடல்நிலை

நலம் பெற்றிடக் கலைஞர் விழைவு

இரா. செழியனுடன் தொலைபேசியில் தொடர்பு

புதுடில்லி, நவ. 17—

காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் எம்.பி. அவர்கள் உடல் நலம் குன்றி, டில்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது குறித்து அமெரிக்காவில் பால்டிமோர் நகரிலிருந்த முதலமைச்சர் கலைஞருக்குச் சென்னையிலிருந்து தகவல் அறிவிக்கப்பட்டது.

செய்தியைக் கேள்வியுற்றதும் கலைஞர் அவர்கள், மக்களவைத் தி.மு.க. கட்சியின் துணைத் தலைவர் இரா. செழியன் அவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்.

மருத்துவமனைக்குச் சென்று காயிதே மில்லத் அவர்களைப் பார்த்துவிட்டு வருமாறும், காயிதே மில்லத் அவர்கள் விரைவில் நலம் பெற்றிடத் தாம் விழைவதைத் தெரிவிக்குமாறும் கலைஞர் அவர்கள், இரா. செழியனிடம் தெரிவித்துக்கொண்டார்.

உடனே இரா. செழியன், கலைஞர் சார்பில் வெல்லிங்டன் மருத்துவமனைக்குச் சென்று காயிதே மில்லத் அவர்களைச் சந்தித்து, அவர் விரைவில் உடல்நலம் பெற்றுத் திரும்ப கலைஞர் தெரிவித்த விருப்பத்தைத் தெரிவித்தார்.

வாக்குச்சீட்டில் குறிபோடும் முறை நீடிக்கும் என அறிவிப்பு

புதுடில்லி, நவ. 17—

"வாக்குச் சீட்டில் வாக்காளர்கள் குறிபோடும் முறை தற்போது நீடிக்கும்; வேறு புதிய முறையைப் புகுத்தத் திட்டமிடப்படவில்லை"

என்று நாடாளுமன்றத்தில்—சட்டத்துறை இணையமைச்சர் நிதிராஜ் சிங் சவுத்திரி, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"கடந்த மார்ச் திங்களில் நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் ரூ. 9.50 கோடி செலவாயிற்று.

"வாக்கு அளிப்பதற்கான வயது வரம்பைக் குறைக்க வேண்டும் — என்று கோரிக்கைகள் வந்திருக்கின்றன; அது பற்றிப் பரிசீலனை நடைபெற்று வருகிறது.

"மேற்கு வங்காளத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்று வருகிறது; அங்கு சட்டமன்றத்திற்கு எப்போது தேர்தல் நடத்துவது என்பது பற்றி முடிவு செய்யப்படவில்லை."

எட்டு மாதங்களில் 566 இரயில் விபத்துகள்

111 பேர் இறந்தனர்—327 பேர் காயமடைந்தனர்

புதுடில்லி, நவ. 17—

"இந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து அக்டோபர் வரையில் — அதாவது கடந்த எட்டு மாதங்களில் — இந்தியா முழுவதிலும் ஏற்பட்ட இரயில் விபத்துக்களின் எண்ணிக்கை 566 ஆகும்.

"இந்த விபத்துக்களில் மொத்தம் 111 பேர் இறந்தனர்; 327 பேர் காயமடைந்தனர்.

"இறந்தவர்களின் குடும்பங்களுக்கோ அல்லது காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கோ இதுவரையில் நஷ்டஈடு வழங்கப்படவில்லை"

என்று நாடாளுமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இரயில்வே அமைச்சர் கே. அனுமந்தையா தெரிவித்தார்.

'வல்லரசாக விளங்கவேண்டும்' என்ற எண்ணம் சீனாவுக்கு இல்லையாம்

பொருளாதாரத்தில் செஞ்சீனாவும் பின்னணியில் இருக்கிறதாம்

ஐ. நா. அவையில் சீனத் தூதுக் குழுத் தலைவர் அறிவிப்பு

ஐ. நா., நவ. 17—

"ஒரு பெரும் வல்லரசாக விளங்கவேண்டும் — என்ற எண்ணம் சீனாவுக்கு இல்லை" என்று ஐ. நா. அவையில் முதன் முதலாகப் பேசுகையில், சீனத் தூதுக் குழுத் தலைவர் சியாவோ குவான் வுவா அறிவித்தார்.

தாங்கள் ஒரு மூன்றாவது உலகைச் சேர்ந்தவர்கள் என்பதை சீனத் தூதுக் குழுவினர் தங்களது பேச்சின் மூலம் வெளிப்படுத்தினர்.

"வளர்ச்சியுற்று வரும் ஏனைய நாடுகளைப்போலவே சீனாவும், பொருளாதாரத்தில் பின்னணியில் இருக்கும் ஒரு நாடாகும்; எனவே, வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்கு அதிக உதவி செய்வதற்கு சீனாவால் இயலாமல் இருக்கிறது" என்றும் அவர் கூறினார்.

"இந்தப் பொருளாதாரப் பின்னடைவுக்கு ஏகாதிபத்தியவாதிகளே காரணம்" என்றார் அவர்.

சீனக் குழுத் தலைவர் மேலும் கூறியதாவது:—

"உதவி பெறும் நாடுகளை சீனா குறைவாக மதிப்பிடுவதில்லை; அந்நாடுகளைச் சம மதிப்பாகவே கருதுகிறது; நிபந்தனைகள் எதுவும் இல்லாமல் அந்நாடுகளுக்கு உதவிகள் அளிக்கப்பட்டுவருகிறது.

ஏகாதிபத்தியவாதிகளுக்கும் — ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எதிராகப் போராடும் மக்களுக்குச் சீனா இலவச இராணுவ உதவி அளிக்கிறது.

இராணுவக் கருவிகளை விற்பனை செய்யும் ஒரு நாடாகச் சீனா விளங்காது.

தைவானை விடுதலை செய்ய வேண்டுமென்பதில் சீனா உறுதி கொண்டிருக்கிறது.

தைவானிலிருந்தும், தென் கொரியாவிலிருந்தும் அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும்.

பாதுகாப்புக்காகவே அணுகுண்டு தயாரிப்பாம்

அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் சீனா சேராது; ஏனெனில், தனது பாதுகாப்புக்காகவே சீனா அணுகுண்டைத் தயாரிக்கிறது; அதுவும் இன்னும் சோதனைக் கட்டத்திலேயே இருந்துவருகிறது.

ஒரு சில நாடுகளே அணுகுண்டைத் தயாரிக்க முடியும் என்ற நிலையைத் தகர்க்க சீனா முயற்சிக்கிறது.

ஐ. நா.-வின் கடமை

ஐ. நா. சபை, உலகச் சமாதானத்துக்காகவும், ஆக்கிரமிப்பை எதிர்க்கவும், உலக நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பைப் பெருக்கவும் பாடுபட வேண்டும்."

முதலில், சீனா உறுப்பினரானதில் மகிழ்ச்சி தெரிவித்தும் — வரவேற்றும் இந்தியா உட்பட 55 நாடுகளின் உறுப்பினர்கள் பேசினர்.

அகதிகள் எண்ணிக்கை

கல்கத்தா, நவ. 17—

வங்காள தேசத்திலிருந்து இதுவரையில், 96,25,000 பேர் அகதிகளாக இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர்.

இவர்களில் 72,50,000 பேர் மேற்கு வங்காளத்திலும், 14 இலட்சம் பேர் திரிபுராவிலும், 6,50,000 பேர் மேகாலயாவிலும், 3 இலட்சம் பேர் அசாமிலும், 1 இலட்சம் பேர் பீகாரிலும் தங்கியிருக்கிறார்கள்.

மேற்கொண்டு நாள் ஒன்றுக்கு 11,000 அகதிகள் வீதம் இந்தியாவுக்கு வந்தவண்ணம் உள்ளனர்.

காயிதே மில்லத் உடல்நிலை

நல்ல திருப்பம் ஏற்பட்டிருப்பதாக டாக்டர்கள் தகவல்

புதுடில்லி, நவ. 16—

புதுடில்லியிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவரும் முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் அவர்களின் உடல்நிலையில் நல்லதோர் திருப்பம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

உணர்வு இழந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு இரத்தம் செலுத்தப்பட்டது; பின்னர்தான் அவருக்கு உணர்வு திரும்பியது.

அவர் மிகவும் பலவீனமாக இருப்பதால், எவருடனும் அவர் பேசக்கூடாது என்று டாக்டர்கள் யோசனை கூறியிருக்கின்றனர்.

அபாயக் கட்டத்தை அவர் கடந்துவிட்டாரா என்பது இரண்டு நாட்களுக்குப் பின்னர்தான் தெரியவரும் என்று டாக்டர்கள் கூறியிருக்கின்றனர்.

எனவே, இரண்டு நாட்களுக்கு அவரைப் பார்க்கப் பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

நம்நாடு
இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 2002 கார்த்திகை 1 (17—11—71) புதன்

நல்லாட்சிக்கு மேலும் ஒரு நற்சான்று!

நாமெல்லோரும் எதிர்பார்த்தபடியே பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாகை சூடியது; கழக வேட்பாளர் ஊத்துக்குழி மோகன்ராசு நாடாளுமன்ற உறுப்பினராக சுமார் 1¼ இலட்சம் வாக்குகள் வேறுபாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கழகத்தை எதிர்த்தும் போட்டியிடத் துணிவில்லாத சிண்டிகேட் கட்சியினரும், தொண்டரே இல்லாத சுதந்தராக் கட்சியினரும் ஒரு சுயேச்சைக்கு முட்டுக்கொடுத்து நின்றனர்; கடைசியில் சரியான குட்டுப்பட்டு மூலையில் அமர்ந்திருக்கின்றனர்.

தி. மு. கழகம் தமிழ்நாட்டில் ஆளும் பொறுப்பேற்ற பின் கடந்த நாலரையாண்டுக் காலத்தில், கழகம் நேரடியாக ஈடுபட்ட எந்த ஓர் இடைத் தேர்தலிலும் தோல்வி என்பதையே காணவில்லை. நாடாளுமன்றத்துக்கானாலும் சரி—சட்டமன்றத்துக்கானாலும் சரி—நடைபெற்ற இடைத் தேர்தல்களில் நிறுத்தப்பட்ட கழக வேட்பாளர் அனைவருமே மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கின்றனர்.

"நாட்டில் நல்லாட்சி நடைபெறுகிறது என்பதற்கு மக்கள் வழங்கும் நற்சான்று முத்திரையே, இடைத் தேர்தலில் ஆளுங்கட்சிக்குக் கிடைக்கும் வெற்றி" என்று, நமது கழகத் தலைவரும்—தமிழக முதல்வருமான டாக்டர் கலைஞர் அவர்கள், பொள்ளாச்சித் தொகுதித் தேர்தல் பிரசாரத்தின்போது சுட்டிக்காட்டியது இத்தொடர்பில் நினைவுகூரத்தக்கதாகும்.

அந்த நற்சான்று முத்திரைகள் தொடர்ந்து நமக்குக் கிடைத்து வந்திருக்கின்றன; பொள்ளாச்சி வாக்காளர்களும் இப்போது நமக்கு நற்சாட்சி வழங்கியிருக்கின்றனர்.

பொள்ளாச்சித் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் நாடாளுமன்றத்திற்குத்தான் என்றாலும், தேர்தல் பிரசாரத்தில், சிண்டிகேட்—சுதந்தரா பிற்போக்குக் கூட்டணியினர் மாநில அரசையே முழுக்க முழுக்க விமர்சித்தனர்! 'தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறவில்லை' என்ற குற்றச்சாட்டையே வாக்காளர்களிடை திரும்பத் திரும்ப எடுத்துவைத்தனர்; ஆனாலும், நல்லாத ஆட்சி நடைபெறுவதாகக் கூறியவர்கட்குப் பொள்ளாச்சி சரியான பாடம் புகட்டிவிட்டது!

பிற்போக்குச் சக்தி எந்த உருவில் வந்தாலும் அடையாளம் கண்டுகொள்ளும் ஆற்றல், பொள்ளாச்சி வாக்காளர்கட்கு மட்டுமல்ல—தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் அனைவருக்குமே உண்டு என்பதை நடந்த இடைக்காலப் பொதுத்தேர்தல்கள் வெட்டவெளிச்சமாக எடுத்துக்காட்டியிருக்கிறது; அதை மீண்டும் உறுதிப்படுத்திய பொள்ளாச்சி வாக்காளர்களைப் பாராட்டுகிறோம்; மீண்டும் கழகத்திற்கே வெற்றி சூட்டிய அவர்களை நன்றியுணர்வுடன் வாழ்த்துகின்றோம்.

வேட்பாளர் பஞ்சத்துக்கு ஆட்பட்ட சிண்டிகேட்டர்களையும், சுதந்தராக்களையும் நம்பித் தேர்தலில் இறங்கத் துணிந்த சுயேச்சை கிருஷ்ணசாமி கவுண்டரின் நிலையை எண்ணி இரங்குகிறோம்; அவருக்கு நமது அனுதாபங்கள் உரித்தாகுக!

உடுமலை நாராயணனை இரண்டுமுறை தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த பொள்ளாச்சித் தொகுதி வாக்காளர்கள், கழகத்தின் மீது தாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மூன்றாவது முறையாகவும் உதய சூரியன் சின்னத்திலேயே முத்திரையிட்டு—துடிப்புள்ள இளைஞரான மோகன்ராசுவைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். வாக்காளர்களின் நம்பிக்கையை நாளும் வளர்க்கும் வகையில், தோழர் மோகனராசு அவர்கள் பணியாற்றுவார் என்பது உறுதி. நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு பெற்றுள்ள மோகனராசு அவர்கட்கும் நமது நல்வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், பொள்ளாச்சித் தொகுதிக்குச் சென்று வந்ததும் செய்தியாளர்களிடம் கருத்தறிவிக்கையில், 'பொள்ளாச்சி நாகர் கோயில் அல்ல—கிருஷ்ணகிரியே' என்று சொன்னது எவ்வளவு சரியான கணிப்பு என்பதைத் தேர்தல் முடிவு நன்கு தெளிவுபடுத்திவிட்டது.

ஏதோ—தேர்தல் பிரச்சாரத்துக்காகத் தெரிவித்த கருத்து—என்று அதனை மாற்றுக் கட்சியினர் கருதியிருக்கக்கூடும்; ஆனால் நாடுக்குத் தெரியும்—கலைஞரின் கணிப்பு எத்தகையதாக இருக்கும் என்பது!

"கோவை விவசாயிகளிடையே அபரிமிதமான செல்வாக்குப் படைத்த ஒருவரை தி. மு. கழகத்துக்குப் போட்டியாகக் கொண்டு வந்து நிறுத்திவிட்டோம்; இதில் தி. மு. க. வெற்றி பெறுவது என்பது இயலாது" என சிண்டிகேட்டர்கள் கருதிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்; அவர்களுடைய வெத்துவேட்டுக்களை மக்கள் நம்பிய காலம் மலையேறிவிட்டது என்பதை அவர்கள் ஏன் இன்னமும் உணரவில்லை என்பதுதான் வியப்பாக உள்ளது.

கலைஞர் அவர்கள் எதிர்பார்த்தபடியே அவருக்கு வெற்றிச் செய்தி அனுப்பப்பட்டுவிட்டது; ஆபிரகாம் லிங்கன் சிலையை அமெரிக்காவிலிருந்து அவர் வாங்கிக்கொண்டு வந்து, அதிக வாக்குகளைப் பெற்றுத் தந்த தொகுதிக்கும் பரிசளிக்க இருக்கிறார்; பரிசு பெறவிருக்கும் 'கிணத்துக்கடவு'த் தொகுதியினரைப் பாராட்டுகிறோம்—குறிப்பாக அத்தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கட்கு நமது பாராட்டு.

கழக வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த கழகச் செயல்வீரர்களுக்கும், மற்றும் தோழமைக் கட்சித் தொண்டர்களுக்கும் நமது பாராட்டு உரித்தாகட்டும்.

பிரச்சாரக் கூட்டங்களில் பங்கு கொண்டும்—அறிக்கைகள் வாயிலாகவும் கழகத்திற்கு ஆதரவு திரட்டிய தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி, இந்தப் பொள்ளாச்சி வெற்றியை, கடற்கரையில் துயிலும் அண்ணன் காலடியில் காணிக்கையாக்கி மகிழ்கிறோம்.

சென்னை நகர் அழகுபடுத்தப்படும்

ரூ. 186 கோடி செலவில் திட்டம்— 20 ஆண்டில் நிறைவேறும்

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தகவல்— மாநகராட்சி அடிக்கல் நாட்டு விழாவில் உரை

சென்னை, நவ. 16—

"வெளிநாட்டினரைக் கவரும் வகையில் சென்னை நகரை படுத்த ரூ. 186 கோடி செலவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தால் இருபதாண்டுக்குள் செயல்படுத்தப்பட்டு விடும்"

என்று கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறினார்.

சென்னை 63-வது வட்டத்தில் உள்ள மன்றோ பாலத்தை ரூ. 16 இலட்சம் செலவில் அகலப்படுத்திக் கட்ட சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது; இதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடந்தது.

கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் அடிக்கல் நாட்டி வைத்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"நாம் வசிக்கும் நகரத்தை நாமே பொறுப்புணர்ச்சியுடனும், தூய்மையுடனும், அழகுடனும் வைத்துக்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் முதலில் தூய்மையைத்தான் கவனிப்பார்கள்.

எனவே, நகரங்களைத் தூய்மையாகவும்—அழகுடனும் விளங்கச் செய்யத் தெருவுக்குத் தெரு குழுக்கள் அமைக்கலாம்.

சென்னை நகரை அழகுபடுத்தத் தமிழக அரசு திட்டங்கள் தீட்டியுள்ளது; இதற்கு ரூ. 186 கோடி செலவாகும்.

இந்தத் திட்டம், மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது; இதற்கு ஒப்புதல் கிடைத்துவிட்டால், இன்னும் 20 ஆண்டுக்குள், சென்னை நகரை அழகுமிக்கதாக மாற்றிவிடலாம்.

இந்தத் திட்டத்தின் மூலம், சென்னை நகரில் உள்ள பக்கிங்காம் கால்வாயைச் சுத்தப்படுத்திவிட்டு—அதில் பாதாள இரயில் பாதை அமைக்கவும், சென்னை நகரைச் சுற்றி வட்ட இரயில் பாதை போடவும், சாலை வசதிகள் பல நவீன முறையில் செய்யவும் முடியும்.

பாதாள இரயில் விடுவது பற்றியும், வட்ட இரயில் பாதை போடுவது பற்றியும் ஆலோசனை செய்வதற்காக, மத்திய இரயில்வே போர்டு, தனியாக இரயில்வே அதிகாரி ஒருவரை நியமித்திருக்கிறது; அந்த அதிகாரி என்னைச் சந்தித்து இரயில் பாதை போடுவது பற்றிப் பேசினார்.

"சென்னை நகர் அழகுடன் விளங்கவும்—போக்குவரத்து வசதி நல்ல முறையில் நடக்கவும், மாநகராட்சி பல திட்டங்கள் போட்டுச் செயல்படுத்தி வருகிறது.

தெற்குக் கடற்கரைச் சாலையும்—லைட்ஹவுஸ் சாலையும் சந்திக்கும் இடத்தில் ஒரு சுரங்க நடைபாதை கட்டவும், கடற்கரை இரயில் நிலையம் அருகில் ஒரு சுரங்கப் பாதை கட்டவும் மாநகராட்சி திட்டமிட்டிருக்கிறது; இதற்கான வேலைகள் அடுத்த ஆண்டு தொடங்கும்.

மன்றோ பாலம், இப்போது 24 அடி அகலம் உள்ளது; இது 60 அடியாக அகலப்படுத்தப்படும்; 18 மாதங்களில் இந்த வேலை முடிவடைந்துவிடும்."

மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன், குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல், நகராட்சி உறுப்பினர் இராமச்சந்திரன் ஆகியோரும் பேசினர்.

மேயர் சா. கணேசன்

விழாவுக்குத் தலைமை தாங்கி மேயர் சா. கணேசன் பேசியதாவது:—

புறம்போக்குநிலம் வைத்துள்ள அரசு ஊழியர்கள்

உடனடியாக ஒப்படைக்கக் கட்டளை

திருச்சி, நவ. 16—

தங்கள் பெயரிலோ அல்லது தங்களை அண்டியுள்ளவர்களின் பெயர்களிலோ அரசு நிலங்களைப் பெற்றுள்ள எல்லா அரசு ஊழியர்களையும் அந்த நிலங்களைத் திரும்ப ஒப்படைத்து விடுமாறு அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

இந்தக் கோரிக்கைக் கடிதம் எல்லா மாவட்டக் கலெக்டர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கிறது; மாநிலத்தில் நிலமில்லாதோர் நிறைய பேர் இருக்கிறார்கள்.

விநியோகிப்பதற்கான நிலம் குறைவாகத்தான் இருக்கிறது என்ற காரணத்தின்மீது, அரசு வழங்கிய நிலங்களை இவ்வாறு திருப்பித் தருமாறு கோரப்படுகிறது.

அரசு ஊழியர்கள் பெற்றுள்ள நிலங்களைத் தாமாக ஒரு மாதத்துக்குள் திருப்பிக் கொடுத்து விடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்ற ஆண்டு இதே மாதிரி நிலங்களைத் திரும்ப ஒப்படைத்து விடுமாறு எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள், எம்.எல்.சி.-க்கள் ஆகியோரிடம் கோரப்பட்டது நினைவிருக்கலாம்.

வட்டார அடிப்படையில் வேளாண்மைத் திட்டம் தேவை

நபர் வாரி உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வேண்டும்

வேளாண்மை ஆராய்ச்சிக் கழக இயக்குநர் டாக்டர் சாமிநாதன் கருத்து

சென்னை, நவ. 16—

"உற்பத்தி பெருகினால் மட்டும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுவிடாது; சராசரி நபர் வாரி உற்பத்தித் திறன் அதிகரித்தாக வேண்டும்; அதுவே நமது வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தின் மூலமந்திரமாக இருக்கவேண்டும்"

என்று இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக இயக்குநர் டாக்டர் எம். எஸ். சாமிநாதன் நேற்று ஒரு பேட்டியில் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"வட்டார அடிப்படையில் விரிவான முறையில் விவசாயத் திட்டத்தை வகுத்தாக வேண்டும்; இணக்கமான முறையில் திட்டமிடப்பட வேண்டும்; உற்பத்திப் பெருக்கத்துடன் நில்லாமல், நபர் வாரி உற்பத்தித் திறனையும் வருவாயையும் பெருக்குவதாக அது இருக்க வேண்டும்.

"கடந்த 10 ஆண்டுக் காலத்தில் வேளாண்மைத் துறையில் சராசரி நபர்வாரி உற்பத்திப் பெருக்கம், ஐரோப்பாவில் 1.30 சதவிகிதமாகவும், இந்தியாவில் 0.20 சதவிகிதமாகவும் இருந்து வந்திருக்கிறது."

இது சம்பந்தமாக அவர் தமிழ்நாட்டிற்குத் தனியாக திட்டக் குழு ஒன்றை மாநில அரசு அமைத்திருப்பதைப் பாராட்டினார்.

சமுதாய நலத் தலைமைப் பண்பிற்காக 'ரேமன் மாகசேசே' விருது பெற்றுள்ள டாக்டர் சாமிநாதன் மேலும் கூறியதாவது:—

"அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டும்கூட, நெல் உற்பத்தியில் புரட்சிகரமான சாதனை காண முடியாமல் போய்விட்டிருக்கிறது; பருத்தி, எண்ணெய் வித்துக்கள் பிரச்சினையிலும் இது பொருந்தும். இந்த நிலைமைக்குக் காரணம் என்ன?

இந்தப் புதிய ரகங்கள், பயிர் நோய்கள்—பூச்சிகள் முதலியவற்றின் தாக்குதலுக்கு எளிதில் இரையாகக்கூடிய அபாயம் இருப்பதுதான்; இத்தகைய பயிர்கள் பிரச்சினையில் வட்டார அடிப்படையில் இன்னும் அதிகமாக இணக்கமான செயல் திட்டமும்—ஒத்துழைப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்; விவசாயிகள் தனியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டால் மட்டும் போதாது."

சட்ட மன்றங்களுக்கான பொதுத் தேர்தல்

பிப்ரவரியில் நடப்பது உறுதி— தேர்தல் குழு அறிவிப்பு

புதுடில்லி, நவ. 17—

"எதிர்பாராத அவசர நிலை ஏற்பட்டு ஒத்திவைக்க நேரிட்டாலன்றி மாநிலச் சட்டமன்றங்களுக்குப் பொதுத்தேர்தல் பிப்ரவரி 15-ம் நாள் முதல் 20-ம் நாளுக்குள் நடக்கும்"

என்று தலைமைத் தேர்தல் கமிஷனர் சென் வர்மா அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர், டில்லி, கோவா ஆகியவற்றில் பிப்ரவரி 20-ம் நாள் வாக்குப் பதிவு நடக்கும் இங்கெல்லாம் ஒரே நாளில் வாக்குப் பதிவு நடந்து முடிந்துவிடும்.

மாராட்டிரத்தில் பிப்ரவரி 15, 17, 20-ம் நாட்களில் வாக்குப் பதிவு நடக்கும்.

மணிபுரியில் 15-ம் நாளுக்கும்—20-ம் நாளுக்குமிடையில் 4 அல்லது 5 நாட்கள் வாக்குப் பதிவு நடக்கும்.

எஞ்சியுள்ள 7 மாநிலங்களிலும், திரிபுராவிலும்—மேகாலயாவிலும் பிப். 17, 20-ம் நாட்களிலும் வாக்குப் பதிவு நடைபெறும்.

எல்லா இடங்களிலும் வாக்குப் பதிவு முடிந்த பிறகே வாக்குகள் எண்ணப்படும்; பிப். 22-ம் நாள் மாலைகளுள் முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மொகரம் பண்டிகை, ஒலிப் பண்டிகை ஆகியவற்றுக்கு முன்னால் வாக்குப் பதிவு நடந்து முடிந்துவிடவேண்டுமென்று மாநிலங்கள் கேட்டுக்கொண்டதையொட்டி, தேர்தல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது."

அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல்கள் நடத்தவேண்டிய மாநிலங்கள் விவரம் வருமாறு:—

அசாம், ஆந்திரம், மத்தியப் பிரதேசம், மாராட்டிரம், இராசஸ்தான், ஜம்மு-காஷ்மீர், இமாசலப் பிரதேசம், மேகாலயா.

குசராத், மைசூர், பஞ்சாம் ஆகியவை தற்போது குடியரசுத் தலைவர் ஆட்சியில் உள்ளன; இவற்றுக்கும்—மற்ற மாநிலங்களுடன் தேர்தல்கள் நடக்கும்.

தேர்தல் நடக்க வேண்டிய மத்திய ஆட்சிப் பகுதிகளாவன:—

டில்லி, கோவா, மணிபுரி, திரிபுரா.

இரும்புத் தட்டுப்பாடு—தவிர்க்க வழி

நிலையான கொள்கையை மத்திய அரசு கடைபிடிக்க வேண்டும்

அமைச்சர் செ. மாதவன் வற்புறுத்தல்

சென்னை, நவ. 16—

"இரும்பை அடிப்படையாகக்கொண்ட தொழில்களுக்கு—குறிப்பாக ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கும் அப்படிப்பட்ட தொழில்களுக்குப் போதிய இரும்பு தட்டுப்பாடில்லாமல் கிடைக்க, மத்திய அரசு ஒரு நிலையான கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும்"

என்று, தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள் இங்கு வற்புறுத்திக் கூறினார்.

திருச்சி கொதிகலன் நிறுவனம் ஒன்று ஈரானுக்கு ரூ. 50 இலட்சம் மதிப்புடைய மிகு அழுத்தக் கொதிகலன் ஏற்றுமதி செய்யும் துவக்க விழாவில் அமைச்சர் கலந்து கொண்டு பேசினார்.

"நமது நாட்டிலிருந்து இப்படிப்பட்ட கொதிகலம் ஏற்றுமதி செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும்"

என்று, அந்நிறுவன நிர்வாகப் பங்குதாரர் வி. டி. மணி தெரிவித்தார்.

"ஏற்றுமதித் துறையில், இந்த நிகழ்ச்சி புதிய ஒரு மைல் கல்லாகும்" என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் மாதவன் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"எஞ்சினியரிங் தொழிலில்—குறிப்பாக ஏற்றுமதிப்பொருட்களின் தேவையைச் சமாளிக்க இரும்பு உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

தொழில் நுணுக்கத்துறையில் நாம போதிய அறிவைப் பெற்றிருக்கிறோம். இதற்காக நாம வெளிநாட்டு உதவியை எதிர்பார்க்க வேண்டியதில்லை.

"துரதிருஷ்டவசமாக, நமது நாட்டில் தனியார் துறை சந்தேகக் கண்களுடனேயே கவனிக்கப்படுகிறது.

"தமிழக அரசைப் பொறுத்த வரையில், தனியாரிடம் நம்பிக்கை கொண்டே செயல்படுகிறது. அவர்களுக்கு எல்லா வசதிகளையும் அரசு செய்து தரும்."

சென்னை—விஜயவாடா மின்சார இரயில் பாதை

திட்டத்துக்கு இரயில்வே போர்டு ஒப்புதல்

ஐதராபாத், நவ. 17—

சென்னைக்கும்—விஜயவாடாவுக்கும் இடையே மின்சார இரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கு இரயில்வே போர்டு ஒப்புதல் அளித்துவிட்டது.

இந்த வேலை, அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் தொடங்கப்பட்டு நான்கு ஆண்டுகளில் முடிக்கப்படும்.

இந்தத் திட்டத்துக்கு ரூ. 53.90 கோடி செலவிடப்படும்; தேவைப்படும் அந்நியச் செலாவணி ரூ. 8,75 கோடி ஆகும்.

இமயம் உயருகிறது

நிபுணர் கண்டுபிடிப்பு

சண்டிகார், நவ. 15—

"இமயமலை உயரமாகவும்—அகலமாகவும் வளர்ந்து கொண்டுதானிருக்கிறது"

என்று இந்திய நில அளவு நிபுணர் ஜி. என். தத் என்பவர் தெரிவித்தார்; இதன் தொடர்பாக மேலும் அவர் கூறியதாவது:—

"இமயமலையின் பக்கவாட்டில் உள்ள பழைய பாறைகள் உடைந்து விழுவதையும், அந்த இடங்களில் மிக நீளமாகப் புதிய பாறைகள் தோன்றி இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; முன்பு, 'இமயமலை உயரமாக மட்டும் வளர்ந்து வருகிறது' என்று கூறப்பட்டது; ஆனால், இப்போது கண்டுபிடிக்கப்பட்டவைகளிலிருந்து இமயமலை அகலத்திலும் வளர்கிறது என்பது தெரிகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் காய்கறிகள் உற்பத்தி

திராட்சைச் சாகுபடியைப் பெருக்கத் திட்டம்

ஆய்வுக்கூடம் அமைக்கவும் நடவடிக்கை— வேளாண்மை ஆராய்ச்சிக் கழக முடிவு

சென்னை, நவ. 17—

முட்டை கோஸ்—பீன்ஸ் போன்ற காய்கறிகளைப் பெரும் அளவில் சாகுபடி செய்வதற்கும், உருளைக்கிழங்கு சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், தர்மபுரி மாவட்டத்தில் திராட்சைச் சாகுபடியை மீண்டும் மேற்கொள்வதற்குமான திட்டங்களைச் செயல்படுத்துவது என்று தமிழ்நாடு வேளாண்மைக் கழகக் கூட்டம் முடிவு செய்தது.

"காலிபிளவர், முட்டைகோஸ், காரட், பீன்ஸ், பீட்ரூட் போன்ற காய்கறிகள் உற்பத்திக்கு ஒசூர் பகுதி சிறந்ததாகும்; இதற்கான திட்டங்களை வகுக்குமாறு மாவட்ட வேளாண்மைக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று தமிழ்நாடு வேளாண்மைக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"ஒசூர், தேன்கனிக்கோட்டை வட்டத்தில் உருளைக்கிழங்கு சாகுபடியை விரிவுபடுத்துவது பற்றியும், நீலகிரியில் உருளைக்கிழங்கு விதைகளைப் பயிரிடுவது பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது.

"மதுரை மாவட்டம் பெரியகுளம், கோடைக்கானல் பகுதிகளுக்குத் திராட்சைச் சாகுபடி பரவியுள்ள நேரத்தில், தர்மபுரி மாவட்டத்தில் 300 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் திராட்சைச் சாகுபடி குறைந்துவருகிறது.

"பன்னீர்த் திராட்சைப்போன்ற பல ரகத் திராட்சைகளைப் பயிரிடுவதில் தமிழ்நாடு முன்னேறியுள்ளது; தற்போது 50 ஏக்கரில் திராட்சைச் சாகுபடி செய்யப்படுகிறது; தர்மபுரியில் திராட்சைச் சாகுபடியை மேம்பாடு செய்வதால் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதோடு மட்டுமின்றி ஒயின் தொழிற்சாலைக்கும் சப்ளை செய்ய முடியும்."

தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்கக் கழகம், ஒரு துணைக் குழுவை அமைத்துள்ளது.

பூச்சி மருந்துக்கான மானிய உதவியை 15-சதவிகிதத்திலிருந்து 50-சதவிகிதமாக அதிகரிக்கும்படி சிபாரிசு செய்வது என்றும் கழகம் தீர்மானித்தது.

மாவட்டந்தோறும் நடமாடும் மண் வளச் சோதனைக்கூடத்தை அமைக்கும்படி அரசிடம் கோர வேண்டுமென்ற யோசனையைக் கழகம் ஏற்றுக்கொண்டது.

"தென்னை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆராயவேண்டும்" என்று மேற்படி கழகத்தின் தலைவர் அரிபாஸ்கர் கூறினார்.

தரமான—குறிப்பாக ஊட்டச்சத்துள்ள ரக அரிசிகளை ஆராய்வதற்கான நல்ல வசதியுள்ள ஆய்வுக்கூடம் நிறுவுவதற்கான திட்டங்களைத் தயாரிக்குமபடி தீவிரச் சாகுபடித் திட்ட இயக்குநரை மேற்படி கழகம் கேட்டுக்கொண்டது.

உருளைக்கிழங்குப் பயிர்களைத் தாக்கிப் பயிர் முழுவதையும் அழிக்கக்கூடிய பூச்சிகள் பரவாமல் கட்டுப்படுத்துவதற்கான புதிய மருந்து ஒன்றை நீலகிரி வேளாண்மை நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இரண்டரை ஆண்டுக் கால ஆராய்ச்சிக்குப் பிறகு 'நெமோடோப்' அந்தப் பயங்கர நோயை 'டெசைண்ட்' என்ற மருந்து கட்டுப்படுத்தும் என்று அவர்கள் மெய்ப்பித்துள்ளனர்.

கல்கத்தாவில் கலைஞர் கருணாநிதி தமிழ்மன்றம்

துணை மேயர் தலைமையில் முன்னாள் அமைச்சர் திறந்துவைத்தார்

கல்கத்தா, நவ. 13—

கல்கத்தாவில் டாக்டர் கலைஞர் கருணாநிதி தமிழ் மன்றத் துவக்க விழா, 7—11—71-ல் மத்திய கல்கத்தாவில் உள்ள பட்டுனி ஹாலில் நடைபெற்றது.

மன்றத் தலைவர் திரு. மு. புதூர் சி. வ. குருந்தப்பன் அனைவரையும் வரவேற்று மன்றத்தின் நோக்கங்களை விளக்கினார்.

கல்கத்தாவிற்கு வரும் தமிழர்கட்குத் தங்கும் இல்லம் (சத்திரம்) ஒன்று கட்டுவது; தமிழர்கட்கு 'ரிலீப் சொசைட்டி' ஒன்று நிறுவுவது; மத்திய கல்கத்தாவில் நடைபெற்றுவரும் இலவசத் தமிழ்ப் பள்ளிக்கு நிதி திரட்டி உதவுவது—ஆகியவை பற்றி எடுத்துரைத்து வரவேற்புரையாற்றினார்.

கல்கத்தா மாநகராட்சித் துணை மேயர் திரு. பன்னலால்தாஸ், மன்றத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில், 'இந்தியாவில் உள்ள மாநிலங்களில், தலைசிறந்த நிர்வாகத் திறனுள்ள ஆட்சியை நடத்தி வரும் தமிழக முதல்வர் கருணாநிதி அவர்களின் பெயரில் சிறந்த நோக்கங்களை அடிப்படையாக வைத்துத் தமிழ் மன்றம் துவக்குவது மிகவும் பொருத்தமானது' என்று கூறி வாழ்த்தினார்.

அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கம் அமைத்துள்ள தமிழ் இலவசப் பள்ளிக் கட்டிட நிதிக்குழுவின் துணைத் தலைவராக இருக்கத் தாம் ஒப்புக்கொள்வதாகவும் அவர் அறிவித்தார்.

வங்க முன்னாள் சட்ட அமைச்சர் திரு. அமர் சக்கரவர்த்தி மன்றத் துவக்க விழாவிற்குத் தலைமை வகித்தார்; அவர் தமது தலைமையுரையில், 'காலஞ்சென்ற அண்ணா அவர்கள் தொடங்கி வைத்த தமிழ் மறுமலர்ச்சியை—தமிழர் நல்வாழ்வில் அக்கறையை—தமிழ்நாட்டின் தொழில்வள முன்னேற்றத்தைச் சிறப்பாக வளர்த்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி பெயரில் மன்றம் துவக்கியதன் மூலம், கல்கத்தாவில் வாழும் தமிழர்கள், தங்கள் தலைவர் மீதுள்ள பாசத்தை இன்று உலகறியச் செய்துள்ளனர்" என்று கூறினார்.

மன்றத் துவக்க விழாவை வாழ்த்தி மக்கள் திலகம் திரு. எம். ஜி. ஆர். அவர்களிடமிருந்தும், தமிழக அமைச்சர்களிடமிருந்தும், மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்தன.

கல்கத்தாவில் உள்ள பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் மன்றத்தை வாழ்த்தி உரையாற்றினர்; பள்ளிச் சிறார்களின் இசை நிகழ்ச்சி நடைபெற்றன.

மன்றச் செயலாளர் திரு. இராம. சிங்காரம் நன்றியுரையாற்றினார்.

மன்றத் துவக்க விழாவிற்குத் தமிழர்கள் திரளாக வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

சென்னையிலிருந்து 11—8—71 அமெரிக்கா புறப்பட்ட தமிழக முதல்வரின் அமெரிக்கச் சுற்றுப் பயணம் முழு வெற்றியடைய, முதல்வரை வாழ்த்தும் விழாவாக 7—11—71-ல் நடைபெற்ற மன்றத் துவக்க விழா பெருஞ் சிறப்பாக நடைபெற்றது.

கல்கத்தாவில் ஆங்கிலம், வங்காளி நாளிதழ்கள் மன்றத் துவக்க விழாச் செய்தியைச் சிறப்பாகப் பிரசுரித்துள்ளன.

மன்ற நிர்வாகிகள்

மன்றத் துவக்க விழாவிற்கு முன்னதாக டாக்டர் கலைஞர் கருணாநிதி தமிழ் மன்ற அமைப்பாளர்களின் கூட்டம் நடந்தது; அக்கூட்டத்தில் ஒருமனதாக மு. புதூர் சி. வ. குருந்தப்பன் தலைவராகவும், திரு. பி. ஆர். முருகப்பன் துணைத் தலைவராகவும், திரு. இராம. சிங்காரம் செயலாளராகவும், திரு. எஸ். எல். சண்முகம் துணைச்செயலாளராகவும், திரு. கே. எஸ். எம். முஸ்தபா பொருளாளராகவும், திரு. ஏ. மாணிக்கம், திரு. எல். மணி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; மன்றத்தின் முதல் செயற்குழு அமைக்கப்பட்டது.

சிவகங்கைத் தொகுதி நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் திரு. தா. கிருட்டினன் மன்றத்தின் சிறப்புத் தலைமைக் காப்பாளராக இருந்து பணியாற்ற ஒப்புதல் தெரிவித்து எழுதியுள்ள கடிதம் மன்றக் கூட்டத்தில் வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

பம்பாய்—கோவண்டி தி. மு. கழகம்

பம்பாய்—கோவண்டி தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 3-10-71 அன்று பம்பாய் மத்தியக் குழு ஆணையாளர் திரு. நெல்லை நா. ந. அபூர்வபாண்டியன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: நெல்லை மு. அபுபக்கர்; செயலாளர்: வா. கிருட்டினன்; துணைச் செயலாளர்: க. பரமசிவன்; பொருளாளர்: இரா. சங்கையன்; மத்தியக் குழு உறுப்பினர்கள்: பத்தமடை ந. கண்ணன், இலக்குமணன், ஆ. ஞார்து சாமி; செயற்குழு உறுப்பினர்கள்: அமிர்சான், மு. மைலேறி, இராமசாமி, கேசவன், பெ. சண்முகம், சி. சுந்தரம்; தணிக்கையாளர்: பத்தமடை ந. கண்ணன்.

சிலை கடத்திய கும்பல் பிடிபட்டது

சிற்பியும்—சிண்டிகேட் பிரமுகர் தம்பியும் கைது

ஒரு வெளிநாட்டு நபரும் அகப்பட்டார்

சென்னை, நவ. 16—

கும்பகோணம் அருகில் உள்ள சிவபுரம் கோயிலிலிருந்து நடராசா சிலை களவாடப்பட்டது சம்பந்தமாக ஒரு வெளிநாட்டுக்காரர் உட்பட மொத்தம் நான்கு பேர்களைத் தமிழ்நாடு துப்பறியும் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

கல்கத்தாவில் இம்மாதம் 7-ந் தேதியன்று லான்ஸ் டேன் என்பவர் கைது செய்யப்பட்டார்; இவர் ஒரு வெளிநாட்டுக் குடிமகன் என்றுசொல்லப்படுகிறது.

பம்பாயில் இம்மாதம் 12-ந்தேதியன்று சுப்பிரமணியபடையாச்சி என்பவரின் மகனை சித்தரஞ்சன் கோவிந்ததாஸ் என்பவர் கைது செய்யப்பட்டார்.

கும்பகோணத்தில் 13-ந் தேதியன்று இராமசாமி ஸ்தபதி என்பவர் கைது செய்யப்பட்டார்.

குத்தாலம் சுப்பிரமணிப் படையாச்சியின் மகன் திலகர் என்பவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்; இவர் சிண்டிகேட் காங்கிரசுப் பிரமுகர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் திருட்டுக்களில் தமக்குத் தொடர்பு உண்டு என்று அவர் ஒரு வாக்குமூலம் கொடுத்திருப்பதாகப் போலீசார் கூறினர்; திலகரின் சகோதரர்தான் சித்தரஞ்சன் கோவிந்ததாஸ் என்று கூறப்படுகிறது.

லான்ஸ் டேன் பல சிலைகளை வாங்கி—பின்னால் அவற்றை விற்றுவந்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

கும்பகோணம் அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அவரைப் போலீசுப் பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

லான்ஸ் டேன் பல இடங்களில் தொடர்பு கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது; பம்பாய்—கும்பகோணம்—சென்னை—பாண்டிச்சேரி—சிதம்பரம் ஆகிய இடங்களில் போலீசார் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இராமசாமி ஸ்தபதி என்பவர் சுத்தப்படுத்துவதற்காக தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சிலைகளை, திலகர், சித்தரஞ்சன் கோவிந்தாஸ் மூலம் லான்ஸ் டேனுக்கு விற்றுவந்தார் என்றும், அந்தச் சிலைகளுக்குப் பதிலாகப் போலி சிலைகளை அவர் தயார் செய்தார் என்றும் சொல்லப்படுகிறது.

சிவபுரம் கிராமத்தில் 1951-ம் ஆண்டில் ஆறு சிலைகள் பூமிக்கடியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன; அவற்றில் ஐந்து சிலைகள் கள்ளத்தனமாக விற்கப்பட்டன என்று போலீசு புலன் விசாரணையில் தெரிகிறது.

நடராசர், சோமாஸ்கந்தர், சோமு பார்வதி, புத்தர், பிரம்மா, நாகப்பட்டினம் புத்தர் ஆகிய ஆறு சிலைகள் 1968-ல் பம்பாயில் ரூ. 5 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. இந்தத் தொகைக்கு ஒரே செக் மூலம் பணம் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலீசார் கண்டுபிடித்துள்ளார்கள்.

இந்தியாவின் இன்றைய நிலையில்....

'மரண தண்டனையை ஒழிப்பது விஷப் பரீட்சைக்கு ஒப்பானது'

சட்டக் கமிஷன் பரிந்துரை

புதுடில்லி, நவ. 17—
"மரண தண்டனையை ஒழித்துவிடக் கூடாது" என்று இந்தியச் சட்டக் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது.

1962-ல், நாடாளுமன்றத்தில் 'மரண தண்டனையை ஒழித்துவிட வேண்டும்' என்று தீர்மானம் கொண்டுவரப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, இது குறித்து ஆராயுமாறு சட்டக் கமிஷனை அரசு கேட்டுக்கொண்டிருந்தது.

இப்பிரச்சினையைக் கவனமாகப் பரிசீலித்த கமிஷன், 'இந்தியாவில் நிலவிவரும் அசாதாரணமான நிலைமையைக் கருதியும், சட்டம் — ஒழுங்கை நிலைநிறுத்தவேண்டியதன் அவசியத்தைக் கருதியும், மரண தண்டனையை ஒழித்து விஷப் பரீட்சை செய்வது உகந்ததல்ல' என்று கருத்தறிவித்தது.

குற்றமாகக் கருதுக!

"நோய்வாய்ப்படாத ஒருவருக்கு, டாக்டர்கள் மருத்துவ சர்டிபிகேட் தருவதைக் குற்றமாகக் கருதவேண்டும்" என்றும் சட்டக் கமிஷன் கூறுகிறது.

"இப்படிப்பட்ட சர்டிபிகேட்டுகள் தவருகப் பயன்படுத்தப்படுவதாகவும், ஆகவே, அதனைத் தரும் டாக்டருக்கும்—பெற்றுக்கொள்ளும் நபருக்கும் அபராதமோ அல்லது ஓர் ஆண்டுவரை சிறைத் தண்டனையோ அல்லது இரண்டுமோ அளிக்கும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும்" என்று கமிஷன் பரிந்துரைத்திருக்கிறது.

முறைகேடாகத் தாக்கும் நபர்களுக்கு தண்டனை

"16 வயதுக்குட்பட்டவர்களை முறைகேடாகத் தாக்கும் நபர்களுக்கு மூன்ருண்டுகள்வரை சிறைத் தண்டனை அளிக்க வகை செய்யவேண்டும்" என்றும் அது கூறியது.

அவமானப்படுத்தினுல் குற்றமாகக் கருதவேண்டும்

"உயிரோடு இருக்கும் ஒருவரை அவமானப்படுத்தும் நோக்கத்துடன் அவரது கொடும்பாவியை எரிப்பதைக் குற்றமாகக் கருதவேண்டும்" என்று கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது.

சட்டக் கமிஷனின் பரிந்துரை நேற்று நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

அண்ணு கல்லறையில் மோகன்ராஜ்

மலர் வளையம் வைத்து வணக்கம் செலுத்தினுர்

சென்னை, நவ. 17—
பொள்ளாச்சி மக்களவைத் தொகுதி இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற திரு. மோகன்ராஜ் நேற்று சென்னை வந்து சேர்ந்ததும், கடற்கரையிலுள்ள அண்ணு கல்லறைக்குச் சென்று மலர் வளையம் வைத்து வணங்கினுர்.

அவருடன் அமைச்சர் மு. கண்ணப்பன், இராமநாதன் எம்.எல்.சி., மற்றும் கழகத் தோழர்கள் சென்றிருந்தனர்.

திரைப்பட நடிகர்கள் வரி பாக்கி

144 பேர்களிடமிருந்து வசூலாக வேண்டுமாம்

புதுடில்லி, நவ. 17—
"புகழ்பெற்ற சில திரைப்பட நடிகர்களிடமிருந்து வசூலாகாமல் பாக்கியிருக்கின்ற வருமான வரித் தொகை ரூ. 1.70 கோடியாகும்.

"மொத்தம் 144 திரைப்பட நடிகர்களிடமிருந்து வருமான வரி பாக்கி வரவேண்டியிருக்கிறது"

என்று நாடாளுமன்றத்தில், நிதித் துறை துணையமைச்சர் தெரிவித்தார்.

எட்டு இடங்களில் பாகிஸ்தான் தாக்குதல்

அகர்தலா, நவ. 17—
திரிபுராவின் தென் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் 8 இடங்களில் பாகிஸ்தான் படைகள் சுட்டன.

எட்டு முனைகளிலும் இந்திய எல்லைக் காவல் படையினர் திருப்பிச் சுட்டனர்.

இந்த ஆண்டில்!

புதுடில்லி, நவ. 17—
"மேலும் சில நூற்பு ஆலைகளின் நிர்வாகத்தை மத்திய அரசு, இந்த ஆண்டில் ஏற்றுக்கொள்ளவிருக்கிறது"

என்று நாடாளுமன்ற மேலவையில், வெளிநாட்டு வர்த்தகத் துறை அமைச்சர் எஸ். என். மிஸ்ரா தெரிவித்தார்.

மீன் பிடிப்புக்குச் சிமெண்டுப் படகுகள்

உள்ளே கம்பிகள் கொடுத்து சிமெண்டினுல் கட்டப்பட்ட புது மாதிரியான மின்விசைப் படகுகளை மீனவர்களின் பயன்பாட்டுக்கு பிரிட்டனில் கட்டியிருக்கிறுர்கள்.

வழக்கமான மரப் படகுகளை விடப் பல நூறு மடங்கு அதிக உறுதியுடன் கூடியது இந்தப் படகு; இரண்டு முதல் 5 சென்டிமீட்டர்வரை கனத்தில் இந்தப் படகுகள் தயாரிக்கப்படுகின்றன.

படகின் அடிப்பகுதிக்கு ஒரு முறை வண்ணப்பூச்சு அடித்துவிட்டால், பல ஆண்டுகளுக்குப் பெயிண்டு தேவையில்லை; இதற்குப் பராமரிப்பு நடவடிக்கைகளும்—செலவும் கிடையாது. மரப் படகுகளாக இருந்தால் கடல் பூச்சிகள் துளைத்துவிடும் — இதில் அந்தக் கவலை கிடையாது.

தண்ணீர் அரிக்காத அளவுக்குத் தனிக் கலவையுடனுன சிமெண்டைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது இந்தப் படகு.

கடலில் 8 மைல் வேகம்வரை செல்லக்கூடியவை இப்படகுகள்; மீன் பிடிப் படகுகளிலேயே அதிக உறுதியுடன்—நீண்டநாள் உழைக்கும்வகையில் அதே நேரத்தில், சிக்கனமாகக் கட்டப்பட்டுள்ள மின் விசைப் படகுகள் உலகிலேயே இவைதான்.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு

நான்கே நாடுகள்தான் வெற்றிபெற்றுள்ளனவாம்— உலக பாங்கித் தலைவர் கூறுகிறுர்

சிங்கப்பூர், அக். 16—
"வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில், ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவிற்கு மக்கள் தொகைக் குறைய இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கும்"

என்று, உலக பாங்கியின் தலைவர் இராபர்ட் மக்நமாரா இங்கு கூறினுர்.

செய்தியாளர் கூட்டமொன்றில் பேசுகையில், மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"ஹாங்காங், சிங்கப்பூர், தைவான், தென் கொரியா ஆகிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுப் பணி, பாராட்டுதலுக்குரியதாகும்.

"இந்த நான்கு நாடுகளைத் தவிர எந்த வளர்ச்சி பெறும் நாடும், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுப் பணியில் கணிசமாக வெற்றிபெறவில்லை என்று ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்."

'சமாதானமே நமது இலட்சியம்'

'அநீதிக்கு எதிராகப் பொறுமை காட்டுவதால் எதனையும் இழந்தவர்களாக மாட்டோம்'

'முஜிபுர் ரகிமானுடன் கலந்துபேசினுல்தான் வங்காள தேசப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலும்'— தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெளிவுரை

புதுடில்லி, நவ. 17—
"வங்க தேசப் பிரச்சினையையொட்டி — பாகிஸ்தான் இராணுவ ஆட்சி இழைத்துவரும் அநீதியைக் கருதிப் போரில் நாம் ஈடுபடுவதற்குமுன் எல்லாவிதமான சமாதானத் தீர்வுகளையும் நாம் கையாண்டே தீரவேண்டும்; இன்னும் சிறிது காலம் காத்திருப்பதனுல், நாம் எதையும் இழந்துவிடமாட்டோம்; உலகம் நம்மைப் பாராட்டவே செய்யும்; நாம் கடைபிடிக்கும் இந்தப் பொறுமைக்கு வெளிநாடுகளின் நிர்ப்பந்தம் காரணமல்ல"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, தமது கட்சியிலும்—எதிர்க் கட்சியிலும் உள்ள தீவிரவாதிகளிடம் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டி விளக்கியிருக்கிறுர்.

வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு வந்த தலைமையமைச்சர், அமைச்சரவை நண்பர்களிடமும் — மற்றும் முக்கியமானவர்களிடமும் பல முறை கலந்து பேசியிருக்கிறுர்

இந்தியாவுக்கு ஆதரவாகவும் — பாகிஸ்தானுக்கு எதிராகவும் உலகக் கருத்து திரண்டுவருவதையும் எதிர்க் கட்சியினரிடமும் — மற்றவர்களிடமும் தலைமையமைச்சர் சுட்டிக்காட்டினுர்.

உறுதி தளராது

வங்க தேசப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென்பதிலும், அகதிகள் தாயகம் திரும்ப வேண்டும் என்பதிலும் இந்தியா உறுதியாக இருப்பதைத் தலைமையமைச்சர் மீண்டும் தெளிவாக்கினுர்.

தீர்வுக்கு வழி

"அரசியல் தீர்வுக்கு முஜிபுர் ரகிமானுடன் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதே சரியானதாகும்" என்பதையும் இந்திரா தெரிவித்தார்.

"ஆனுல் முஜிபுர் ரகிமான், உயிருடன் இருக்கிறுரா இல்லையா என்பதை என்னுல் கூற இயலாது; அவர் உயிருடன் இருந்தால் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும்; அமைதியான தீர்வுக்கு அதுவே சிறந்த வழியாகும்.

அவருக்கு இதுவரையில் நடந்தவை ஏதும் தெரியாது; தம்முடைய சகாக்களுடன் அவர் கலந்தாலோசிக்காமல் — இதுவரையில் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளாமல் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது இயலாத ஒன்ருகும்; ஆகவே, முதலில் அவர் விடுதலை செய்யப்பட்டு சுதந்தரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும்" என்பது தலைமையமைச்சரின் கருத்தாகும்.

பொதுவாகவே, நடைபெற்ற துயர நிகழ்ச்சிகள் காரணமாக இனிமேல் பாகிஸ்தானுடன் வங்க தேசம் கூட்டு அமைப்பாகவோ இணைந்தோ இருப்பது சாத்தியமில்லை என்று இங்கு கருதப்படுகிறது.

தனிச் சுதந்தர நாடு தவிர வேறு எதுவும் தங்களுக்கு ஏற்புடையது அல்ல என்பது, விடுதலைப் போராட்டத் தலைவர்களின் உறுதியாகும்.

கறுப்புப் பணம் வேட்டை

'நூறு ரூபாய் நோட்டுகளை செல்லாது என அறிவிக்கத் தேவையில்லை'

மத்திய அமைச்சர் பதில்

புதுடில்லி, நவ. 17—
நாடாளுமன்ற மேலவையில், கறுப்புப் பணம் வேட்டைபற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், நிதித் துறையமைச்சர் கே. ஆர். கணேஷ் கூறியதாவது:—

"1969—70-ம் ஆண்டில் நடத்திய பல்வேறு சோதனைகளில் ரூ 95 இலட்சம் கறுப்புப் பணம் சிக்கியது.

"1970—71-ல் கைப்பற்றப்பட்ட கறுப்புப் பணம் ரூ. 40 இலட்சமாகும்.

"கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக நூறு ரூபாய் நோட்டுகளை, 'செல்லாது' என்று அறிவிக்கத் தேவையில்லை.

"மற்ற வழிகளில் வரி ஏய்ப்பைத் தடுக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறேம்."

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

நவ. 18 காலை 11 மணி: ஆத்தூர்—நகராட்சி வரவேற்பு — நகரசித்தித் தொழிலாளர் குடியிருப்புத் திறப்பு; மாலை 4 மணி: நிலம் இல்லாதவருக்குப் பட்டா வழங்குதல்; 5 மணி: விவசாயக் கிடங்கு அடிக்கல் நாட்டு விழா; இரவு 7-30 மணி: பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 19 மாலை 4 மணி: கோவை—தொழிலாளர் கல்வி நற்சான்று வழங்கு விழா — மற்றும் பிற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

நவ. 20: கும்பகோணம்—பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

தாமிரம் — நிக்கல் கலந்த உலோகத்தில் 25 — 50 காசு நாணயங்கள்

புதுடில்லி, நவ. 17—
நாடாளுமன்ற மேலவையில், இந்தியா முழுவதிலும் சில்லறைக் காசு பற்றுக்குறை ஏற்பட்டதுபற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் நிதித் துறை துணையமைச்சர் கே. ஆர். கணேஷ் தெரிவித்ததாவது:—

"நாணயங்களின் உற்பத்திச் செலவு அதிகரித்துவிட்டது; நாணயங்கள் தயாரிக்கும் உலோகங்களின் மதிப்பு உயர்ந்துவிட்டதே இதற்குக் காரணமாகும்.

"தற்போது புழக்கத்தில் இருந்துவரும் 20 காசு நாணயங்கள் தயாரிப்பதை நிறுத்திவிட மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; டிசம்பர் 1-ம் நாளிலிருந்து 20 காசு நாணயம் அச்சடிப்பது நிறுத்தப்படும்; எனினும், தற்போது புழக்கத்தில் உள்ள 20 காசு நாணயங்கள் தொடர்ந்து செல்லுபடியாகும்.

25 காசு நாணயங்கள்

"25 காசு நாணயங்கள் தயாரிப்பது டிசம்பர் 1-ம் நாளிலிருந்து மீண்டும் தொடங்கும்; முன்பு இருந்த நாணயங்கள் சுத்தமான நிக்கல் உலோகத்தில் தயாரிக்கப்பட்டது; இனி, தாமிரமும் — நிக்கலும் கலந்த உலோகத்தில் தயாரிக்கப்படும்.

"50 காசு நாணயத்தையும் தாமிரம் — நிக்கல் கலந்த உலோகத்தில் தயாரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது."

திராவிட முன்னேற்றக் கழகத்தினரான திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] சென்னை-10) 'நம் நாடு' வெளியிடப்படுகிறது.